செ.வெ.எண் -48 நாள்:26.02.2018

# அரியலூரில் 2 இலட்சத்து 46 ஆயிரத்து 240 குழந்தைகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்படும் தேசிய குடற்புழு நீக்க முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் குழந்தைகளுக்கான குடற்புழு நீக்கும் திட்டத்தின்கீழ் தேசிய குடற்புழு நீக்க நாள் (National Deworming Day) பிப்ரவரி 26 முன்னிட்டு குழந்தைகளுக்கான சிறப்பு முகாம் பிப்ரவரி 26 முதல் மார்ச் 1 வரை அனைத்து அரசு, அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் நடைபெறுகின்றது.

இதனையொட்டி, இன்று (26.02.2018) அரியலூர் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்ற குழந்தைகளுக்கான தேசிய குடற்புழு நீக்க முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தொடங்கி வைத்து, 181 மாணவியர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கினார்கள்.

பள்ளி குழந்தைகள் தமது உடல்நலத்தை பேணிக்காக்க வேண்டும் எனவும், படிப்பில் கவனமுடன் இருந்து கல்வியில் முன்னேற்றமடைய வேண்டும் என மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

**இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் இன்று (26.02.2018) தேசிய குடற்புழு நீக்க தினத்தை முன்னிட்டு 01 முதல் 19 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் குடற்புழு நீக்க மாத்திரை (அல்பெண்டசோல்) அங்கன்வாடி மையங்கள், அரசு, அரசு சார்ந்த மற்றும் தனியார் பள்ளிகளில் வழங்கப்படுகிறது.

26.02.2018 அன்று தேசிய குடற்புழு நீக்க நாளில் குடற்புழு நீக்க மாத்திரை பெற இயலாமல் விடுபட்ட குழந்தைகளுக்கு சிறப்பு முகாம் (Mop-Up-Day) மூலம் 01.03.2018 வரை வழங்கப்பட உள்ளது.

அங்கன் வாடி மையங்களில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத 01 முதல் 05 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும், பள்ளி செல்லாத 01 முதல் 19 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும், பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கு (01 முதல் 12-ஆம் வகுப்பு வரை) பள்ளியிலேயே அல்பெண்டசோல் மாத்திரை வழங்கப்படுகிறது. 2 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 200மி.கி. மாத்திரைகளும், 2 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு 400 மி.கி மாத்திரைகளும் வழங்கப்படுகிறது.

இப்பணிகளுக்கு பொது சுகாதாரத்துறையினருடன், பள்ளிக்கல்வித்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப்பணிகள் திட்டத்துறை பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் இணைந்து பணியாற்றுகின்றனர்.

அரியலூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் அல்பெண்டசோல் மருந்து மற்றும் மாத்திரைகள் 2,46,240 லட்சம் குழந்தைகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குடற்புழு நீக்க மாத்திரை, வழங்குவதன் மூலம் குழந்தைகளுக்கு இரத்தசோகை வராமல் தடுக்கப்படுகிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து சுறுசுறுப்பாக இருக்க உதவுகிறது. அறிவுத்திறன் மற்றும் உடல் வளர்ச்சியை மேம்படுத்தவும், ஆரோக்கியமாக இருக்கவும் உதவுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வீ.சி.ஹேமசந்த்காந்தி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் எ.புகழேந்தி, மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் அ.அனந்தநாராயணன், கடுகூர் வட்டார மருத்துவ அலுவலர், பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.